بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 5:2 துல்கஃதா, 1429, பக்கங்கள்=12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A,Email : suvanam@gmail.com, www.suvanam.com

## இஸ்லாமும் பாடல்களும்

*- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

மனிதன் உலகத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கு, சில நிபந்தனைகளுடன் இஸ்லாம் முழு அனுமதியையும் வழங்கி இருக்கின்றது. அதில் ஒன்றுதான் பாடல்களை கேட்டு ரசிப்பது. இஸ்லாத்தில் பாடல்கள் கேட்பதற்கு எந்த தடையுமில்லை, ஆனால் பாடல்கள் மூன்று நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். ஒன்று ஷிர்க்கில்லாத பாடலாக இருக்க வேண்டும், இரண்டாவது தவறான கருத்துக்களில்லாத பாடலாக இருக்க வேண்டும். மூன்றாவது இசை இல்லாத பாடலாக இருக்க வேண்டும். ஷிர்க்கில்லாத பாடலென்பதின் கருத்து, நாம் படிக்கும் பாடல்களோ அல்லது நாம் கேட்கும் பாடல்களோ அல்லாஹ்விற்குரிய தன்மைகளை பிறருக்கு கொடுக்கக்கூடிய கருத்துக்களை பொருந்தியதாகவோ அல்லது அல்லாஹ்விற்கு செய்ய வேண்டிய வணக்கங்களை அல்லாஹ்வின் படைப்புகளுக்கு கொடுக்கத் தூண்டும்படியான பாடல்களாகவோ இருக்கக்கூடாது. தவறான கருத்துள்ள பாடலென்பது, தவறான கலாச்சாரத்தையும் தவறான பழக்க வழக்கங்களையும் கூறக்கூடிய, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இரட்டை கருத்துள்ள பாலியல் உணர்வுகளை தூண்டக்கூடிய வார்த்தைகளை கூறக்கூடிய பாடல்கள், இவை அனைத்தையும் இஸ்லாம் தடுக்கின்றது. இத்துடன் பாட்டில் இசை கலந்திருக்கவும் கூடாது. இவைகள் அல்லாத பாடல்களை கேட்பதில் தவறில்லை.

இன்று நமது நாடுகளில் இஸ்லாமிய பாடல்கள் என்கிற பேரில் ஷிர்க் மற்றும் இசை கலந்த பாடல்கள் நமது வீடுகளில் வலம் வந்து கொண்டிருப்பது கவலைக்குரியதாகும். குறிப்பாக, அதிகாலையில்

*தொடர்ச்சி 5 ம் பக்கம் பார்க்க ...*

### உள்ளே!

கடவுள் இருக்கின்றானா? - 2
விருந்தோம்பல் - 3
இறை நினைவுகள் - 4
இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் - 6
வெற்றி நடை போடும் குற்றவாளிகள் - 8
குற்றப்பரிகாரம் - 11
அறிவுப் போட்டி - 12

## உள்ளூர் ஹாஜிகளின் கவனத்திற்கு

முறையான அனுமதிப் பெறாமல் ஹஜ் செய்ய முற்படும் உள்ளூர் ஹாஜிகளை போலிஸார் பிடித்தால் உடனே சவூதியிலிருந்து அவர்கள் வெளியேற்றப் படுவார்கள் என மக்கா கவர்னர் இளவரசர் காலித் அல்பைசல் அறிவித்துள்ளார்.

'ஹஜ்' என்னும் இஸ்லாமிய கடமை உடல் மற்றும் பொருளாதார வலிமைப் பெற்ற ஒவ்வொரு முஸ்லிமுக்கும் வாழ்நாளில் ஒரு முறை தான் கடமையாகும். ஆனால் சவூதிக்கு வந்து வேலைப் பார்க்கும் சிலர் முறையான அனுமதி பெறாமாலேயே வருடாவருடம் ஹஜ் செய்ய முயற்சிப்பதால் தேவையில்லாத கூட்ட நெருக்கடிகள் ஏற்படுகிறது. அதுமட்டுமில்லாமல் தங்குவதற்கு கூடாரமில்லாமல் அவர்கள் தெருவிலும், நடைபாதையிலும் தங்கி மற்ற ஹாஜிகளுக்கு கஷ்டத்தையும், நெருக்கடியையும் ஏற்படுத்துகிறார்கள்.

மேலும் மக்கா கவர்னர் இளவரசர் காலித் அல்பைசல் தனது அறிக்கையில் அனுமதிப் பெற்ற ஹஜ் ஏஜன்டின் வாகனங்களில் தான் ஹாஜிகள் பயணம் செய்ய வேண்டும். அவ்வாறு அனுமதியில்லாமல் செல்லும் வாகனங்களின் உரிமையாளர்கள் மீதும், முறையின்றி பயணம் செய்யும் ஹாஜிகள் மீது தீவிர நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் சவூதியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

எனவே முறையான ஹஜ் அனுமதிப் பெற்று ஹஜ் செய்யுங்கள்.

நன்றி: அரப் நியூஸ்

### வாசகர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

சுவனப்பாதை மாதஇதழின் இலவச வெளியீட்டான 'குர்ஆன் ஹதீதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரார்த்தனைகள்' என்ற பிரார்த்தனை புத்தகத்தை பெற்றுக் கொள்ளாதவர்கள் அல்லது மேலதிகமாக தேவையுடையவர்கள் மௌலவி இப்ராஹீம் மதனி அவர்களை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

# கடவுள் இருக்கின்றானா?

*- இறைநேசன்*

இளம் பேராசிரியர் ஒருவர் சிறு வயதிலேயே பேராசிரியர் ஆனவர். அவர் இயல்பாகப் பழகினாலும், அவருடைய அறிவுத் திறனும், பேச்சு வன்மையை கண்டு மாணவ, மாணவியர் கூட்டம் அவரை ஒரு பத்தடி தள்ளியே வைத்திருந்தது. அறிவியல் வகுப்பில் மாணவ, மாணவிகள் பலரும் கூட்டாக அமர்ந்து ஐன்ஸ்டீனின் சார்பியல் கோட்பாட்டை (Theory of Relativity) மனனம் செய்து கொண்டிருந்தார்கள்.

பேராசிரியர், புரியாதவர்களுக்கும் கூட ஓரளவுக்கு புரிய வைத்துவிட்டுத்தான் அடுத்த வேலையைப் பார்ப்பார். 'ஐயோ எனக்குப் புரிய வேணாம் சார், நான் சாய்ஸ் (Choice)-ல விட்டுவிடுகிறேன் சார்', என்கிற சால்ஜாப்பு எல்லாம் அவர் கிட்ட எடுபடாது.

அறிவியல் பற்றி அவர் விளக்கும் போதெல்லாம், பகுத்தறிவும் தெளித்து விளக்கும் ஆழ்ந்த பகுத்தறிவுச் செல்வர் நம்முடைய பேராசிரியர், அறிவியல் பயிலப் பயில அனைத்தும் தெரிந்து தெளிந்து விடும் என்பது அவர் ஆழமான கருத்து.

பேராசிரியர்: ஐன்ஸ்டீன் சார்பியல் கோட்பாட்டைப் பற்றி அவரவர் பார்வையில் சிறு குறிப்பு எழுதிக்கிட்டு வரச் சொன்னேனே, யார் முதலில் வந்து முன்னிலை வகிக்கப் போகிறீர்கள்?'

மாணவரில் ஒருவர்: 'நம்ம அப்துல்லாஹ் தான் சார் முதலில் கொடுக்கப் போகிறான்'

பேராசிரியர்: 'வா அப்துல்லாஹ் துவங்கு உன் கச்சேரியை!'

அப்துல்லாஹ்: நன்றி சார்! ஒவ்வொரு அணுவுக்குள்ளும் (atom), சக்தி (energy) இருக்குங்க சார்! அதை எப்படி அளக்கணும் என்பதைத் தான் இந்த கோட்பாடு கூறுகின்றது.

அந்தச் சக்தி = அணுவின் கனம் X ஒளியின் வேகம் X ஒளியின் வேகம்

உதாரணம் ஒன்று பார்த்தால் சுலபமாகப் புரியும் சார். ஒரு கிலோ தூய்மையான தண்ணீரில் சுமார் 111 கிராம் ஹைட்ரஜன் அணுக்கள் இருக்கும் சார். அப்போ அந்தத் தண்ணிக்குள் எவ்வளவு சக்தி இருக்கும்?

E = 0.111 kg x 3x10^8 x 3x10^8 = 10,000,000,000,000,000 Joules!

பேராசிரியர்: 'அருமை! அருமை! மேல சொல் அப்துல்லாஹ்'

அப்துல்லாஹ்: 'ஒரு புத்தகத்தை வேகமாக கீழே போட்டால் ஒரு Joule சக்தி ஆகின்றது சார்! அப்படியென்றால் ஒரு கிலோ தண்ணிக்குள் எவ்வளவு சக்தி ஒளிந்திருக்கிறது பார்த்தீர்களா? கிட்டத்தட்ட நாற்பது மில்லியன் லிட்டர் பெட்ரோல் தரும் சக்தி ஒரு கிலோ தண்ணிக்குள் இருக்குங்க சார்!'

'வாவ்! அருமை! மிகவும் எளிமையாகச் சொல்லி இருக்கிறாய் அப்துல்லாஹ்!'

'இவ்வளவு சக்தியும் எப்படி சார் தண்ணிக்குள் இருந்து ரிலீஸ் பண்ண முடியும்? ஒரு பக்கெட் தண்ணிக்குள் இவ்வளவு சக்தியா என்று முதலில் தோன்றும்!

அதே போலத் தான் சார் கடவுளும்! மேலோட்டமாகப் பார்க்கும் போது ஒன்றுமே தெரியாது! ஆனா அளந்து பார்த்தோமென்றால், ஒவ்வொரு சின்னப் பொருளுக்குள்ளும் , இறைவனின் அபரிமிதமான சக்தி ஒளிந்துக்கொண்டு இருக்கிறதென்று தெரியும்!

இது தான் சார் என்னுடைய பிரசென்டேஷன்! அனைவருக்கும் நன்றி நண்பர்களே!'

பேராசிரியருக்கு கோபம் பொத்துக்கொண்டு வருகிறது!

பேராசிரியர்: 'நான்சென்ஸ்! எதோடு எதைத் தொடர்பு படுத்திச் சொல்கிறாய்? அறிவிருக்கிறதா உனக்கு! இதை யார் சொல்லிக் கொடுத்தார்கள் உனக்கு?'

அப்துல்லாஹ்: 'நான் படிக்கும் போது நானாகப் புரிந்து கொண்டது தான்! ஏன் சார் தவறா?'

பேராசிரியர்: 'டோட்டல் நான்சென்ஸ்! இது அறிவியல்! இதுக்குள்ள எப்படி கடவுள் வந்தான்? கடவுள்-னு ஒருத்தன் இருந்தாத் தானே, அவனுடைய சக்தியை அளக்க முடியும்? இல்லாத ஒன்றை எப்படி அளப்பாய்? பைத்தியம் போல் பேசாதே!'

அப்துல்லாஹ்: 'கோவிச்சிக்காதீங்க சார்!

அணுவுக்குள் இவ்வளவு சக்தி இருக்கென்று நமக்கு மட்டும் முன்னாடி தெரிந்ததா என்ன? இல்லையென்று நினைத்துக்கொண்டு இருந்த சக்தி இப்ப இவ்வளவு இருக்கே சார்? அதைத் தான் சார் நான் சொன்னேன்!'

பேராசிரியர்: 'ஓஹோ...அப்ப கடவுள் இருக்கிறான் என்று சொல்கிறாய்! அப்படித் தானே?'

அப்துல்லாஹ்: 'ஆமாம் சார்!'

பேராசிரியர்: 'சரி, மக்களே, இன்றைக்கு வகுப்பில் இது தான் டிஸ்கஷன்! நானும் பார்க்கிறேன் இது எங்க போயி முடிகிறதென்று'

'சொல் அப்துல்லாஹ் கடவுள் இருக்கிறானே! அவன் நல்லவனா?'

அப்துல்லாஹ்: 'ஆமாம் சார்! நல்லவன் தான்!

பேராசிரியர்: 'உம்ம்ம்ம்...சரி, கடவுள் சர்வ சக்தி படைத்தவனா?'

அப்துல்லாஹ்: 'ஆமாம் சார்!'

பேராசிரியர்: 'எங்க அக்கா மிகவும் கடவுள் நம்பிக்கை கொண்டவள் அவளுக்குக் கேன்சர் வந்து கன்னியாகவே செத்துப் போனாள்! பாவம், மிகவும் நல்லவள், அன்பானவள்!

கொஞ்ச நாள் அறிமுகமான நண்பர்களுக்கே நாம் முடிந்த அளவுக்கு உதவுகிறோம்! ஆனா அந்தக் கடவுள் அவளுக்கு உதவவில்லை! ஏன்?

கடவுளுக்கு நல்ல மனது இல்லையா, இல்ல அவனிடம் அவ்வளவு சக்தி இல்லையா? அவன் கடவுளா? வெறும் ஆளா?'

(அப்துல்லாஹ் மௌனம் காக்கிறான்)

'சரி அப்துல்லாஹ் இதற்காவது பதில் சொல்! கடவுள் எல்லாவற்றையும் படைத்தான் அல்லவா?'

அப்துல்லாஹ்: 'ஆமாம் சார்!'

'பேராசிரியர்: உலகத்தில் கொடுமை, அதர்மம், நோய், வெறுப்பு, அசிங்கம் எல்லாம் நிறைய இருக்கிறதா?'

அப்துல்லாஹ்: 'இருக்குங்க சார்!'

பேராசிரியர்: 'அதையெல்லாம் கூடக் கடவுள் தான் படைத்தானா?'

'உம்...அறிவியல் என்ன சொல்கிறது? ஐந்து புலன்களையும் வைத்து உலக ஓட்டத்தை அறிந்து கொண்டு வாழ்கிறோமென்று சொல்கின்றது இல்லையா?

(மீண்டும் அப்துல்லாஹ் மௌனம் காக்கிறான்)

கடவுளை நீ எப்படி அறிந்து கொண்டாய்? எதை வைத்து அறிந்து கொண்டாய்?'

'ஆகக் கூடி, கடவுளை நீ பார்த்ததில்லை, கேட்டதில்லை, முகர்ந்ததும் இல்லை, சுவைக்கவில்லை, தொட்டதில்லை!

ஆனா கடவுள் இருக்கிறான் என்று மட்டும் சொல்வாய், அப்படித் தானே?'

'கடவுள் இருக்கிறான் என்று நீ இன்னும் நம்புகிறாயா?'

அப்துல்லாஹ்: 'ஆமாம் சார்! நம்புகின்றேன்!'

பேராசிரியர்: 'அடப்பாவி! சின்னப் பசங்க தான் நாட்டின் எதிர்காலம்! நீங்கெல்லாம் அறிவியல் சிந்தனையை வளர்த்துக்கணும்! ஏதோ ரொம்ப நல்லா ஐன்ஸ்டீன் சூத்திரத்தைச் சொல்கிறாய் என்று பார்த்தேன்! இப்படி வடிகட்டின மடையனா இருக்கிறாயே? கடவுளை நம்புகிறவன் முட்டாள்-டா!

அறிவியல்ல சிந்திக்கணும் உனது மூளை! அப்பொழுது தான் முன்னேறுவாய்!

கடவுளை நம்புகிறேன் நம்புகிறேன்னு சொல்கிறாயே! எதை வைத்து நீ நம்புகிறாய்?'

அப்துல்லாஹ்: 'எதுவும் இல்லைங்க சார்! என் நம்பிக்கையை வைத்துத் தான் நம்புகிறேன்!'

பேராசிரியர்: 'நம்பிக்கைக்கும் அறிவியலுக்கும் சம்பந்தமே இல்லை! தெரியும் தானே?'

அப்துல்லாஹ்: 'சரிங்க சார், இவ்ளோ நேரம் என்னைக் கேள்விகள் கேட்டீங்க! கடவுள் அறிவியலில் பல இடங்களில் வருகிறான்! அதெல்லாம் நான் உங்களைச் சில கேள்விகளாக கேட்கலாமா?'

(மொத்த வகுப்பே சீட்டின் நுனிக்கு வருகிறது!)

இன்ஷாஅல்லாஹ் தொடரும்...

# விருந்தோம்பல்

மேலும், அ(வ்விறை)வின் மீதுள்ள பிரியத்தினால் ஏழைகளுக்கும், அநாதைகளுக்கும், சிறைப்பட்டோருக்கும் உணவளிப்பார்கள். (76:8)

"அல்லாஹ்வின் திருப்பொருத்தத்திற்காகவே நாங்கள் உங்களுக்கு உணவளிக்கிறோம். உங்களிடமிருந்து கூலியையோ, நன்றியையோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை" என்றும் கூறுவார்கள். (76:9)

யார் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்புகிறாரோ அவர் தன் விருந்தினரை கண்ணியப்படுத்தட்டும்.

அபூஹுரைரா(ரலி) : புகாரி, முஸ்லிம்

"யாராவது ஒருவர் ஒரு சமூகத்தினரை விருந்தினராக ஏற்கும் போது அவர்கள் வறுமைக்குட்பட்டவராக இருந்தால் அவர்களுக்கு உதவுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். தனது பொருள், தனது விவசாயத்திலிருந்து அவர்களுக்கு விருந்து கொடுத்து உதவ வேண்டும்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அபூதாவூத், அஹமத்

யார் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் விசுவாசிக்கின்றாரோ அவர் தனது விருந்தினரை கண்ணியப்படுத்தட்டும். விருந்தாளிக்குப் பரிசு ஓர் இரவும் ஒரு பகலும், அதிகப்படியாக விருந்து உபசரிப்பு மூன்று நாட்களாகும், அதற்கு பின்னால் உள்ள உபசரிப்பு தர்மமாகும். விருந்தாளி விருந்து கொடுப்பவருக்கு கஷ்டம் கொடுக்கும் விதத்தில் நடந்து கொள்ளக் கூடாது.

குவைலித் பின் அம்ர்(ரலி) : புகாரி, முஸ்லிம்

வானவர்கள் சிலர் என்னிடம் வந்து, "இவருக்கு உதாரணம் கூறுங்கள்" என்று தமக்கிடையில் கேட்டு கொண்டார்கள். ஒருவர் ஒரு வீட்டைக் கட்டி அதில் விருந்துக்கு ஏற்பாடு செய்கிறார். விருந்துக்கு அழைக்கவும் ஒருவரை அனுப்பிவைக்கிறார். யார் அந்த அழைப்பை ஏற்றார்களோ, அவர்கள் அவ்வீட்டில் நுழைந்து விருந்து உண்பார்கள். யார் அழைப்பை ஏற்கவில்லையோ அவர்கள் வீட்டிற்குள் நுழைய மாட்டார்கள். விருந்தும் உண்ணமாட்டார்கள். இதுவே இவருக்கு உதாரணமாகும் என்று கூறினார்கள். வீடு என்பது சுவர்க்கமாகும். அழைக்கச் சென்றவர் முஹம்மத்(ஸல்) அவர்களாவார் என வானவர்கள் விளக்கம் அளித்தனர் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஜாபிர் பின் அப்துல்லாஹ்(ரலி) : புகாரி

"யார் விருந்தழைப்பை ஏற்க மறுக்கிறாரோ அவர் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்துவிட்டார்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அபூஹுரைரா(ரலி) : புகாரி

யார் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்புகிறாரோ அவர் மதுபானம் பரிமாறப்படும் விருந்துகளில் கலந்து கொள்ளவேண்டாம், என நபி(ஸல்) கூறினார்கள்.

ஜாபிர்(ரலி) : அஹமத்

செல்லவந்தர்கள் மட்டும் அழைக்கப்பட்டு ஏழைகள் புறக்கணிக்கப்படும் விருந்து தான் விருந்துகளில் மிகக் கெட்டதாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(அபூஹுரைரா(ரலி) : புகாரி)

விருந்து மூன்று நாட்களாகும். ஒருவரது உரிமை ஒரு பகல் ஒரு இரவாகும். அதன் பின்னர் செலவு செய்பவை தர்மமாகும். விருந்துக்குச் செல்பவர், விருந்தளிப்பவருக்கு சிரமமளிக்கும் அளவுக்குத்

தங்குவது ஹலால் இல்லை.

அபூஹுரைரா(ரலி) : திர்மிதீ

ஒரு கூட்டத்தாரிடம் விருந்தாளியாகச் செல்பவர் அவர்களின் அனுமதியின்றி நோன்பு வைக்கக்கூடாது. ஒரு கூட்டத்தினரின் இல்லத்தில் நுழைபவர் அவ்வீட்டார் அமரச் சொல்லும் இடத்தில் அமரட்டும், ஏனெனில் அவ்வீட்டார் தான் தமது இல்லத்தின் அந்தரங்கம் பற்றி நன்கு அறிந்தவர்கள்.

அபூஹுரைரா(ரலி) : திர்மிதீ

சல்மான்(ரலி) அவர்களிடம் ஒரு மனிதர் வந்தார் அவருக்காக தன்னிடம் உள்ளதைக் கொண்டு வரச் செய்தார்கள். தனது தோழருக்காக சிரமம் எடுத்துக்கொள்வதை விட்டும் நபி(ஸல்) அவர்கள் தடுத்திருக்காவிட்டால் உமக்காக நாம் சிரமம் எடுத்துக் கொண்டிருப்போம் என்று சல்மான்(ரலி) கூறினார்கள்.

ஷகீக் பின் ஸலமா(ரலி) : அஹ்மத், தப்ரானி

"அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்பக் கூடியவர் தனது விருந்தினருக்குரிய கடமையைச் செய்து அவரைக் கண்ணியப்படுத்தட்டும்" என்று நபி(ஸல்) கூறிய போது "அவருக்குரிய கடமை யாது?" என்று நபித்தோழர்கள் கேட்டனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள் "ஒரு பகல் ஒரு இரவு" என்று விளக்கம் தந்துவிட்டு விருந்து (அதிகபட்சம்) மூன்று நாட்களாகும். அதன் பின்னர் அளிக்கப்படுவது தர்மமாகும் எனவும் கூறினார்கள்.

அபூஹுரைரா(ரலி) : புகாரி, முஸ்லிம்

ஒரு மனிதரிடம் அவரது சகோதரர்களில் சிலர் வரும்போது, தன்னிடம் உள்ள (சாதாரண உணவை) அவர்களுக்கு முன் வைப்பதை இழிவாகக் கருதுவது அவருக்கு நாசமாகும், ஒரு கூட்டத்தினருக்குப் பரிமாறப்படுவதை அவர்கள் இழிவாகக் கருதுவது அவர்களுக்கு அது அழிவாகும்.

ஜாபிர்(ரலி) : அஹ்மத், தப்ரானி (அவ்ஸத்)

அனஸ்(ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த போது அவர்களை நோய் விசாரிக்க சிலர் வந்தனர். "பணிப்பெண்ணே! நமது தோழர்களுக்காக ரொட்டித் துண்டையேனும் கொண்டு வா" என்று கூறிவிட்டு "நல்ல பண்புகள் சுவனத்திற்கான அமல்களில் உள்ளவையாகும்" என்று நபி(ஸல்) கூற நான் செவியுற்றுள்ளேன் என்றும் கூறினார்கள்.

ஹுமைத் : தப்ரானி

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 18 *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

## பிறருக்காக செய்யும் துஆவின் சிறப்புகள்

எந்த ஒரு முஸ்லிமான அடியார், தம் சகோதரருக்காக மறைவில் (அவர் முன்னிலையில் இல்லாதபொழுது) துஆச் செய்கிறாரோ, அப்பொழுது அவருக்கு ஒரு மலக்கு, நீர் அவருக்காக கேட்ட நலவான விஷயங்கள் போன்றவை உமக்கும் உண்டு என்று கூறுவாரே தவிர வேறில்லை. (முஸ்லிம்)

ஒரு முஸ்லிமான மனிதர், தம் சகோதரருக்காக மறைவில் செய்யும் துஆ ஒப்புக் கொள்ளப்பட்டதாகும். துஆச் செய்யும் அம்மனிதரின் சிரசின்(தலை) அருகில் ஒரு மலக்கு நியமனம் செய்யப்பட்டிருப்பார். அவர் தம் சகோதரருக்கு நலவானதைக் கேட்டு துஆச் செய்யும் போதெல்லாம் அம்மலக்கு ஆமீன் உமக்கும் அதுபோன்ற நலவானது உண்டு என்று கூறுவார். (முஸ்லிம்)

## துஆவின் சில சட்டங்கள்

யார் ஒருவருக்கு ஒரு நன்மை செய்யப்பட்டு, அவர் அந்நன்மை செய்தவருக்கு ஜஸாக்கல்லாஹ் ஹைரன்

جَزَاكَ اللهُ خَيْرًا

அல்லாஹ் உமக்கு நற்கூலி வழங்குவானாக என்று கூறுகிறாரோ, அவர் அவரை அதிகமாகப் புகழ்ந்துரைத்து(நன்றி கூறி)விட்டார். (திர்மிதி)

உங்களுக்கு, நீங்களே கேடாக(கெட்ட)துஆச் செய்ய வேண்டாம். உங்களின் பிள்ளைகள் மீது கேடாக துஆச் செய்ய வேண்டாம். உங்கள் பொருள்கள் மீது கேடாக துஆச் செய்ய வேண்டாம்.(ஏனெனில்) நீங்கள் எதனைக் கேட்டாலும், அல்லாஹ் உங்களுக்கு ஒப்புக் கொள்ளக்கூடிய அல்லாஹ்வின் ஒரு நேரத்திற்கு நிங்கள் நேர்பட்டு விட வேண்டாம்.(அந்நேரத்தில் நீங்கள் என்ன துஆக் கேட்டாலும் ஒப்புக் கொள்ளப்பட்டு விடும்) (முஸ்லிம்)

ஓர் அடியான் தன் ரப்புடன் மிக நெருக்கமாக இருக்கும் நிலை, அவன் ஸஜ்தாவில் இருக்கும்பொழுது தான். ஆகவே ஸஜ்தாவில் அதிகமாக துஆக் கேளுங்கள். (முஸ்லிம்)

உங்களில் ஒருவர் அவசரப்படாத காலமெல்லாம், அவருடைய துஆ ஒப்புக் கொள்ளப்படும். (அவசரப்படுவது எப்படியெனில்) நான் என் ரப்பிடம் துஆச் செய்தேன். (ஆனால் இதுவரை) அதனை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறுவதாகும். (புகாரி, முஸ்லிம்)

முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில், பாவத்தைக் கொண்டோ, உறவைத் துண்டிப்பது கொண்டோ, துஆச் செய்யாத காலமெல்லாம், மேலும் அவசரப்படாத காலமெல்லாம், ஓர் அடியானின் துஆ ஒப்புக் கொள்ளப்பட்டு வரும். அவசரப்படுவது என்றால் எவ்வாறு? என நபி(ஸல்)அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு நபி(ஸல்) அவர்கள், நான் துஆச் செய்தேன், நான் துஆச் செய்தேன் (ஆனால்) அது ஒப்புக் கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை என்று அடியான் கூறிவிட்டு, கைசேதமும், கவலையும் அடைந்து துஆச் செய்வதை விட்டு விடுவதுதான் அவசரப்படுவது எனக் கூறினார்கள், என அறிவிக்கப்பட்டுள்ளது.

எந்த துஆ அல்லாஹ்விடம் மிக ஒப்புக் கொள்ளப்படும்? என நபி(ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு, அவர்கள் கடைசி இரவின் நடுப்பகுதியில் கேட்கப்படும் துஆ, பர்ளான தொழுகைக்குப் பின்னால் கேட்கப்படும் துஆ ஆகியவை மிக ஒப்புக் கொள்ளப்படும் துஆக்களாகும் என கூறினார்கள். (திர்மிதி)

*இஸ்லாமும் பாடல்களும்... முதல் பக்கத் தொடர்ச்சி...*

விழித்தெழுந்ததும் முதலில் கேட்பது நாகூர் E.M ஹனீபா மற்றும் அவர் போன்றவர்களின் பாடல்களைத்தான். இவைகளுக்குப் பெயர், இஸ்லாமியக் கீதம்??? இவைகள் இஸ்லாமியக் கீதமா? இஸ்லாத்திற்கு முறணான கீதமா? இஸ்லாத்திற்கு முறணான பல கருத்துக்களைக் கூறக்கூடிய, இந்த பாடல்களுக்கு இஸ்லாமியக் கீதம் என்கிற முத்திரையையும் மக்கள் வழங்கியிருக்கின்றார்கள். இது போன்று மவ்லிது என்கிற பேரில் தெளிவான ஷிர்க்கியத்தான பாடல்களையும் நமது வீடுகளில் படிக்க வைப்பதற்கு, கூலிக்கு மாரடிப்பவர்களை கூட்டி வந்து, நமக்கு தெரிந்தோ தெரியாமலோ பெரும் ஷிர்க்கையும் நமது வீடுகளில் அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றோம், இதைப் பற்றிய தெளிவை மக்களுக்கு கூற வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முதலில் பாடகர்கள் பற்றி இஸ்லாம் கூறுவதை காண்போம்.**

அல்லாஹ் பாடகர்கள் பற்றி குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்.

இன்னும் புலவர்கள் (எத்தகையோரென்றால்) அவர்களை வழிகேடர்கள் தாம் பின்பற்றுகிறார்கள். நிச்சயமாக அவர்கள் ஒவ்வொரு பள்ளத்தாக்கிலும் (பாதையிலும்) அலைந்து திரிவதை (நபியே!) நீர் பார்க்கவில்லையா? இன்னும் நிச்சயமாக, நாங்கள் செய்யாததைச் (செய்ததாக) அவர்கள் சொல்லுகிறார்கள்.

ஆனால், எவர்கள் ஈமான் கொண்டு, (ஸாலிஹான) நற்செயல்கள் செய்து அல்லாஹ்வை அதிகமாக தியானம் செய்து (தங்களுக்கு) அநியாயம் செய்யப்பட்ட பின்னர் (அதற்காக) பழிதீர்த்துக் கொண்டார்களோ அவர்களைத் தவிர (மற்றவர்கள் குற்றவாளிகள்தாம்); அநியாயம் செய்தவர்கள், தாங்கள் எங்கு திரும்பச் செல்லவேண்டு மென்பதையும் திட்டமாக(ப் பின்னர்) அறிந்து கொள்வார்கள். 26:224,227

அதாவது, பாடகர்கள் உண்மைக்கு மாறாக பேசுபவர்கள், இல்லாத ஒன்றை இருப்பதாக சொல்லி, சொல்ல விரும்பும் செய்தியை எதைக் கூறியாவது நிலை நிறுத்தப்பார்ப்பவர்கள். 'பெண்ணுக்கு அழகு கூந்தல், கவிதைக்கு அழகு பொய்' என்று கூறுமளவு, பாடகர்கள் பொய் கூறுவார்கள். இதுதான் இன்றைய உலக நடப்பும் கூட. ஒருவரை உயர்த்துவதற்காக அவரை வானளாவ அளவுக்கு உயர்த்துவார்கள், ஒருவரை இகழ்வதற்காக அவரை தரைமட்டத்திற்கே இறக்கி கொண்டு வந்து விடுவார்கள். இதுதான் பாடகர்களின் நிலையாகும்.

இவ்வாறு நபி(ஸல்) அவர்களுக்கு, நாம் கவிதையை கற்றுக் கொடுக்கவும் இல்லை, அது அவர்களுக்கு தேவையுமில்லை என்று திருமறை கூறுகின்றது. இதுபற்றி அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

(நம்முடைய தூதராகிய) அவருக்கு நாம் கவிதை (இயற்றக்) கற்றுக் கொடுக்கவில்லை; அது அவருக்குத் தேவையானதும் அல்ல் இது நல்லுப தேசமும் தெளிவான குர்ஆனுமே தவிர வேறில்லை. 36:69

மேற்கூறப்பட்ட திருவசனங்களின் மூலம் பாட்டுப் பாடுவதும் அதை கற்றுக் கொள்வதும் அவசியமில்லாத ஒன்றாகும் என்றும், பாடகர்கள் பொய் சொல்லியே தங்களின் பாடல்களையும் கவிதைகளையும் மெருகூட்டுவார்கள் என்று கூறி அப்படிப்பட்ட பாடகர்ளை எச்சரிக்கின்றது இஸ்லாம். அதே நேரத்தில், நபி(ஸல்) அவர்களின் வீட்டிலே சிறுமிகள் பெருநாள் தினத்தில் பாட்டுக்களை படித்துக் கொண்டிருக்கும் போது, அபூபக்ர்(ரலி) அவர்கள் அதை தடுத்த போது, நபி(ஸல்) அவர்கள், இது அவர்களின் பெருநாளுடைய தினம் பாடவிடுங்கள் என அனுமதி வழங்கினார்கள் என்று ஹதீது புகாரி முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் பதிவாகியிருக்கின்றது. மற்றும் நபி(ஸல்) அவர்களை குறைஷி கவிஞர்கள் கவிதை மூலம் நபி(ஸல்) அவர்களை வசைபாடிய போது, ஹஸ்ஸான் இப்னு தாபிது(ரலி) அவர்களுக்கு கவிதை மூலம் விடை சொல்லும்படி கூறிய ஹதீது புகாரியில் பதிவாகியுள்ளது. அதே போன்று, அகழ் போரில் நபித்தோழர்கள், பசியோடு வயிற்றிலே கற்களை கட்டியவாறு சில கவிதைகளை பாடினார்கள்.

நபி(ஸல்) அவர்கள் அகழ் தோண்டப்படும் இடத்திற்கு சென்றபோது, முஹாஜிரீன்களும் அன்சாரிகளும் குளிரான காலை நேரத்தில் அகழ் தோண்டிக் கொண்டிருந்ததைப் பார்த்தார்கள். அந்த நேரம் அதை அவர்களுக்கு செய்து கொடுக்கும் அடிமைகள் இருக்க வில்லை. அவர்கள் கொண்டிருக்கும் கஷ்டத்தையும் பசியையும் பார்த்த நபி(ஸல்) அவர்கள் (பின்வரும் கவிதைகளை பாடினார்கள்)

**இறைவா! உண்மையான வாழ்க்கையென்பது, மறுமை வாழ்க்கையாகும் அன்சாரிகளுக்கும் முஹாஜிரீன்களுக்கும் நீ மன்னிப்பு வழங்குவாயாக!**

**நபி(ஸல்) அவர்களுக்கு விடை கொடுக்கும் முகமாக நபித்தோழர்கள் பின்வரும் கவிதைகளை பாடினார்கள்.**

**நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் உடன்படிக்கை செய்திருக்கின்றோம்**

**உயிர்வாழும் வரை ஜிஹாத் செய்வதற்கு. (புகாரி)**

(பின்வரும் கவிதைகளை) கூறிய நிலையில், அகழ்போர்களத்தில் நபி(ஸல்) அவர்கள் மண்ணை சுமந்து கொண்டு செல்வதை நான் பார்த்தேன், மண், அவர்களின் வயிற்றின் வெண்மை நிறத்தை மூடியிருந்தது,

**நீ இல்லையென்றால், நாங்கள் நேர்வழி பெற்றிருக்க மாட்டோம். இன்னும் தர்மம் செய்திருக்கவும் மாட்டோம் தொழுதிருக்கவும் மாட்டோம். ஆகவே எங்கள் மீது அமைதியை இறக்கி வைப்பாயாக!**

**நாங்கள் எதிரிகளை சந்தித்தால் (எங்களின்) கால் பாதங்களை உறுதிப்படுத்துவாயாக! .... என சில வரிகளை நபி(ஸல்) பாடினார்கள்.**

**அறிவிப்பவர் : பராஉ (ரலி), ஆதாரம் : புகாரி**

மேல் கூறப்பட்ட ஹதீதுகளின் மூலம், நல்ல கருத்துக்களுள்ள பாடல்களை படிப்பதும் கேட்பதும் ஆகுமென்றும், தவறான கருத்துள்ள பாடல்லகளை படிப்பதும் கேட்பதும்தான் தவறு என்பதும் தெளிவாகின்றது.

ஷிர்க்கான கருத்துள்ள பாடல்களை படிக்கவும் கூடாது, கேட்கவும் கூடாது என்று, நான் குறிப்பிட்டதைப்பற்றி உங்களில் சிலர் ஆச்சரியப்படலாம். ஆம், நமது பாடர்கள் பாடும் பல பாடல்களில் ஷிர்க்கியத்தான வார்த்தைகள் மிகத் தெளிவாகவே இருக்கின்றது. உதாரணத்திற்கு ஒரு சிலவற்றை பார்ப்போம்.

இன்ஷாஅல்லாஹ் தொடரும்

# இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் (பாகம் - 2)

- டாக்டர் ஷேக் சையது M.D.

### மனிதன் மண்ணால் படைக்கப்பட்டானா?

முதல் மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான் என்பது பற்றி அறிந்து கொள்வது, "கரு"வில் குழந்தையின் வளர்ச்சியின் நிலைகள் பற்றி தெளிவாக புரிந்து கொள்வதற்கு துணையாக இருக்கும் என்பதனால் அது பற்றி குர்ஆன் என்ன சொல்கிறது, அறிவியல் உலகம் என்ன முடிவு எடுத்திருக்கிறது என்று இந்த இதழின் தொடரில் பார்ப்போம்.

முதல் மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான் என்பதில் மதவாதிகளுக்கும், (யூதர்கள், கிருஸ்தவர்கள்) "இயற்கையே கடவுள்" என நம்பிக்கை கொண்டுள்ள நாத்திகவாதிகளுக்கும் இடையில் நீண்ட நாட்களாகவே கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றன.

"பாத்திரங்கள் எவ்வாறு மண்ணிலிருந்து செய்யப்படுகிறதோ, அது போல் மண்ணிலிருந்து நேரடியாக மனித உருவம் செய்யப்பட்டு உயிரூட்டப்பட்டது" என்று மதவாதிகள் நம்பி வருகிறார்கள்.

இயற்கையை இறைவனாக ஏற்றுக் கொண்டவர்கள் "அமீபா" என்ற ஒரு செல் உயிரினத்திலிருந்து வளர்ச்சி அடைந்து இயற்கையாக பல மாற்றங்களுக்குள்ளாகி பல்வேறு உயிரினங்களாக தோன்றி, அது குரங்கு நிலைக்கு வந்து, அதன் பிறகு நிகழ்ந்த மாற்றத்தில் குரங்கிலிருந்து முதல் மனிதன் தோன்றினான் என்ற டார்வினின் (செத்து போன) தத்துவத்தை(?) நம்பி வருகிறார்கள்.

இந்த இரண்டு கருத்துமே தவறானது என்ற முடிவுக்கு வந்துள்ளது இன்றைய விஞ்ஞான உலகம். "அமீபா"விலிருந்து இயற்கையாகவே வளர்ச்சி அடைந்து, மனிதனுடைய நிலைக்கு வந்திருப்பது உண்மை என்று நாம் நம்ப வேண்டும் எனில் அந்த வளர்ச்சி தொடர்ந்து நடைபெற்று, மனிதனிலிருந்து வேறு ஒரு உயிரினம் உருவாகி இருக்க வேண்டும். மனிதன் உருவாகி பல ஆயிரம் ஆண்டுகள் ஆகியும் அதுபோன்ற மாற்றம் நிகழ்ந்துள்ளதாக செய்திகள் இல்லை. அவ்வாறு நிகழ்வதற்கான அறிகுறிகூட இல்லை. குரங்கு மனிதனாக மாறியது உண்மை எனில் இப்போதுள்ள குரங்குகள் ஏன் மனிதனாக மாறுவதில்லை.?

படைப்பாளன் இல்லாமல் ஒரு பொருள் உருவாகும் என்பதை எந்த காலத்தில் வாழ்ந்த அறிவியல் அறிஞர்களாலும் நிரூபணம் செய்ய முடியவில்லை. அவ்வாறு கற்பனை செய்துகூட பார்க்க முடியாது என்பது தான் உண்மை. எனவே டார்வினின் "இயற்கையாக எல்லாப் பொருளும் வந்தன" என்ற தத்துவம் (?) குப்பையில் தூக்கி எறியப்பட வேண்டிய ஒன்று என்ற முடிவுக்குத்தான் வர முடிகிறது.

மண்ணிலிருந்து நேரடியாக மனித உருவம் செய்யப்பட்டு உயிரூட்டப்பட்டது என்று மதவாதிகளால் நீண்ட காலமாக நம்பப்பட்டு வரும் தகவலையும் அறிவியல் உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வாறு செய்யப்பட்டிருப்பதற்கு சாத்தியங்கள் குறைவு என்பதற்கு பல காரணங்களை முன் வைக்கிறார்கள்.

### மண்ணின் "மூல"சத்திலிருந்து படைக்கபட்டான் மனிதன்.

மண்ணையும், மனிதனையும் ஆய்வு செய்த போது இரண்டின் மூலங்களும் ஒரே பண்புடையதாக இருக்கிறது, எனவே மண்ணின் மூலப் பொருள்களை எடுத்துதான் மனிதன் படைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று இன்றைய அறிவியல் அறிஞர்கள் கூறி வருகிறார்கள். அவர்கள் இந்த முடிவு எடுப்பதற்கு பல ஆண்டுகள் ஆய்வு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

(மண்ணிற்கும் மனிதனுக்கும் பொதுவாக அமைந்திருக்கும் வேதியில் தனிமங்கள்: பிராணவாய்வு, கால்சியம், பொட்டாசியம், உப்பு, கார்பன், ஹைட்ரஜன், பாஸ்பரஸ், கந்தகம், சோடியம், நைட்ரஜன், குளோரின், மெக்கினீசியம், இரும்பு, செம்பு போன்றவைகளாகும்.)

ஆனால் அல்லாஹ்வின் அருள்மறை குர்ஆனையும் நபிமொழியினையும் படித்துப் பார்த்தால் இது புது கருத்தல்ல, 1429 ஆண்டுகளுக்கு முன்பே சொல்லப்பட்டுவிட்ட ஒரு தகவல் ஆகும். அந்த உண்மையை புரிந்து கொள்வதற்குதான் இத்தனை ஆண்டுகள் ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டுள்ளது என்பது தெரியவரும்.

### முதல் மனிதனும், குர்ஆனும்.

மனிதனை மண்ணிலிருந்து படைத்தோம், களிமண்ணிலிருந்து படைத்தோம் என்று குர்ஆனில் பல இடங்களில் சொல்லப்பட்டுள்ளது. இந்த வசனங்களை மட்டும் படித்து பார்ப்பவர்கள் மண்ணிலிருந்து பாத்திரங்கள் செய்யப்படுவது போல் நேரடியாக மனித உருவம் செய்யப்பட்டு உயிரூட்டப்பட்டான் என்று தான் புரிந்து கொள்கின்றனர். உண்மை அது அல்ல. மனிதனை படைப்பதற்கு தேவைப்படும் மூலக்கூறுகள் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டு அதன் மூலமாகத்தான் மனிதன் படைக்கப்பட்டான் என்ற செய்திதான் குர்ஆனில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை குர்ஆன் முழுவதையும் படித்துப் பார்க்கும் ஒருவரால் எளிதாக புரிந்து கொள்ளலாம்.

மனிதன் களிமண்ணால் படைக்கப்பட்டான் என்று ஒரு வசனத்திலும், மண்ணால் படைக்கப்பட்டான் என்று வேறொரு வசனத்திலும் கூறப்பட்டுள்ளது.

(هُوَ الَّذِي خَلَقَكُمْ مِنْ طِينٍ)(الأنعام:2)

அவன் (அல்லாஹ்) தான் உங்களை களிமண்ணால் படைத்தான். அல் குர்ஆன் 6: 2

(وَمِنْ آيَاتِهِ أَنْ خَلَقَكُمْ مِنْ تُرَابٍ)(الروم:20)

இன்னும் அவன் (அல்லாஹ்) உங்களை மண்ணிலிருந்து படைத்திருப்பது அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளதாகும். அல் குர்ஆன் 30: 20

குர்ஆனில் ஆதி மனிதனை படைத்த செய்தியை கூறிவரும் போது "தீன்" (களிமண்) என்ற வார்த்தையை 6 முறையும், "துராப்" (சாதாரண மண்) என்ற வார்த்தையை 6 முறையும் பயன்படுத்தி அல்லாஹ் கூறியுள்ளான். இயற்கையில் களிமண்ணுடைய தன்மையும், சாதாரண மண்ணுடைய தன்மையும் ஒன்றல்ல. சில மாறுபட்ட பயன்களை தரக்கூடியது. இந்த இரண்டு வித மண்ணும் மனிதனுடைய படைப்பில் நிச்சயமாக பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அதுவும் சரிசம அளவில் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். காரணம்

மனிதனை களிமண்ணிலிருந்து படைத்தோம் என்ற செய்தியையும், சாதாரண மண்ணிலிருந்து படைத்தோம் என்ற செய்தியையும் குர்ஆனில் சமமான முறையில் சொல்லப்பட்டுள்ளது.

"தீன்" என்ற வார்த்தையும், "துராப்" என்ற வார்த்தையும் ஒரே பொருளில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று வாதிப்பது தவறான போக்காகும். காரணம் அல்லாஹ் வெறுமனே ஒரு வார்த்தையைத் தேர்ந்தெடுத்து செய்திகளை சொல்வதில்லை. அவன் பல்வேறு வார்த்தைகளைப் பயன்படுத்தி ஒரே செய்தியை சொன்னாலும், அந்த ஒவ்வொரு வார்த்தையிலும் ஒவ்வொரு அர்த்தம் நிச்சயமாக மறைந்திருக்கத்தான் செய்யும். மனிதனை களிமண்ணில்தான் படைத்தான் என்றால் "தீன்" என்ற வார்த்தை மட்டும் போதுமானது. அல்லது சாதாரண மண்ணில் மனிதன் படைக்கப்பட்டிருந்தால் "துராப்" என்ற வார்த்தை மட்டும் போதுமானது. அவ்வாறிருந்தும் இரண்டு வார்த்தைகளையும் இந்த தொடரில் பயன்படுத்தப்பட்டிருப்பது மனிதன் இந்த இருவகை மண்ணிலிருந்தும் தான் படைக்கபட்டுள்ளான் என்ற தகவலைச் சொல்வதற்காகத்தான் அல்லாஹ் அவ்வாறு பயன்படுத்தி இருக்கலாம் என்று நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

அதாவது முதலில் களிமண்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த தகவலை பின்வரும் 32வது அத்தியாத்தில் 7-வது வசனத்தில் இடம் பெற்றிருக்கும் வசனத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம். அந்த வசனத்தில் "மனிதனின் படைப்பை களிமண்ணிலிருந்துதான் ஆரம்பித்தான்"| என்று இடம் பெற்றுள்ளது. அதன் பிறகு அந்த களிமண்ணில் சாதாரண மண்ணையும் சேர்த்து கலவையாக ஆக்கப்பட்டு அதிலிருந்து மூலக்கூறுகளை எடுத்து மனிதன் படைக்கப்பட்டுள்ளான்.

(களிமண் கொண்டு மட்டும் எந்த பொருளையும் உருவாக்க முடியாது, களிமண் கொண்டு மட்டும் உருவாக்கப்படும் பொருள் காய்ந்துவிடும் போது விரிசல் ஏற்பட்டு, உறுதிவாய்ந்ததாக இருப்பதில்லை, பாத்திரங்கள், செங்கள் போன்ற பொருட்கள் செய்வதற்கு களிமண்ணுடன் மண்ணையும் சேர்க்கும் போதுதான் உறுதி கிடைக்கும், அதனால் தான் களிமண்ணில் பாத்திரம், செங்கள் செய்பவர்கள், வீடு கட்டுவர்கள் மண்ணையும் சேர்த்து கொள்வதைப் பார்க்கிறோம். அதுபோல் சாதாரண மண் கொண்டு எந்தப் பொருளையும் தயாரிக்க முடியாது. காரணம் ஒன்றோடு ஒன்று சேரும் பிசு பிசுப்பு தன்மை அதில் இருப்பதில்லை. ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்கு இரு வகை மண்ணும் அவசியப்படுகிறது என்பதை நாம் நடைமுறையில் அறிந்து வருகிறோம்.)

இந்த இரு வகை மண்ணின் கலவைதான் மனிதனின் படைப்பிற்கு அடிப்படை. இந்த இருவகை மண்ணிலிருந்து நேரடியாக மனித உருவம் செய்து, அந்த உருவத்தில் உயிரூட்டப்பட்டு மனிதன் படைக்கப்படவில்லை. மாறாக இந்த இரு வகை மண்ணின் கலவையினை பல வேதியில் மாற்றங்களுக்கு உட்படுத்தி, அந்த கலவையிலிருந்து மனிதனைப் படைப்பதற்கு தேவையான "மூல" த்தை எடுத்து அந்த மூலத்திலிருந்துதான் முதல் மனிதன் படைக்கப்பட்டான். இதனை நாம் கற்பனையாக சொல்லவில்லை. மனிதன் படைக்கப்பட்ட செய்தியினை கூறும் பின்வரும் இறைவசனங்கள், நாம் எடுத்து வைக்கும் வாதத்தை உறுதி படுத்துகிறது. மனிதன் எவ்வாறு படைக்கப்பட்டான் என்ற தகவலைத் தரும் வசனங்களை நிதானமாக படித்துப் பார்க்கும் இந்த கருத்தினை எளிதாக புரிந்து கொள்ள முடிகிறது.

**(الَّذِي أَحْسَنَ كُلَّ شَيْءٍ خَلَقَهُ وَبَدَأَ خَلْقَ الْإِنسَانِ مِن طِينٍ) (السجدة:7)**

(அவன்) எத்தகையவனென்றால் அவன் படைத்த ஒவ்வொரு பொருளையும் (அதன் வடிவமைப்பையும்) மிக்க அழகாக்கி வைத்தான். மேலும் மனிதனின் படைப்பை களி மண்ணிலிருந்து ஆரம்பித்தான். 32: 7

இந்த வசனத்தில் "மனிதனின் படைப்பை களி மண்ணிலிருந்து ஆரம்பித்தோம்" என்று கூறப்பட்டுள்ளது. இதுதான் மனித படைப்பின் ஆரம்ப நிலை.

களி மண்ணிலிருந்து நேரடியாக மனிதம் உருவம் செய்து உயிரூட்டப்பட வில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. மனிதனின் படைப்பை களி மண்ணிருந்து ஆரம்பித்து, எந்தந்த நிலையை அடைந்து, அது எவ்வாறு முழுமை அடைந்தது என்று அடுத்தடுத்த வசனங்களின் மூலம் அல்லாஹ் கூறி வருகிறான்.

**(إِنَّا خَلَقْنَاهُم مِّن طِينٍ لَّازِبٍ) (الصافات:11)**

நிச்சயமாக நாம் அவர்களை பிசு பிசுப்பான களிமண்ணிலிருந்து படைத்திருக்கின்றோம். அல்குர்ஆன்: 37:11

### இது மனித படைப்பின் இரண்டாவது நிலை.

பிசு பிசுப்பான களிமண்ணிலிருந்து மனிதன் படைக்கப்பட்டதாக இந்த வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். களிமண் பிசுபிசுப்பான நிலைக்கு எப்போது மாறும்? களிமண்ணுடன் தண்ணீர் சேர்க்கப்படும் போது அது பிசுபிசுப்பான நிலைக்கு மாறி விடுகிறது. இந்த வசனத்தின் மூலம் மனிதனின் படைப்பில் தண்ணீரும் சேர்க்கப்பட்டுள்ளது என்ற செய்தியையும் சேர்த்து புரிந்து கொள்ள முடிகிறது. (மனிதன் உடலமைப்பில் 75 சதவீதம் தண்ணீர் இடம் பெற்றிருப்பது இங்கே கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயம்.) களிமண்ணில் தண்ணீர் சேர்த்து பிசு பிசுப்பான நிலைக்கு கொண்டு வரப்பட்டு சில காலம் அதே நிலையில் இருந்தது. (எவ்வளவு காலம் என்பது அல்லாஹ்விற்கு மட்டும் தெரிந்த விஷயம்.)

**(وَلَقَدْ خَلَقْنَا الْإِنسَانَ مِن صَلْصَالٍ مِّنْ حَمَإٍ مَّسْنُونٍ) (الحجر:26)**

மாற்றமடைந்து துர்வாடை ஏற்படும் கறுப்பு மண்ணிலிருந்து மாறிய, தட்டினால் ஓசை வரும் களிமண்ணிலிருந்து நிச்சயமாக நாம் மனிதனைப் படைத்தோம். அல் குர்ஆன்: 15: 26

இந்த வசனத்தில் மனித படைப்பின் மூன்றாவது மற்றும் நான்வாது நிலையினை அல்லாஹ் கூறி இருக்கிறான்.

"ஹமஉ" என்றால் கருப்பு மண் என்பது பொருளாகும். "மஸ்னூன்" என்றால் மாற்றமடைந்து துர்வாடை ஏற்படும் மண் என்பது பொருளாகும். மண், களிமண், தண்ணீர் ஆகிய மூன்றும் சேர்ந்த கலவையை அதே நிலையில் சில காலம் விட்டு வைக்கப்பட்டு விட்டது நீண்ட நாட்கள் (எவ்வளவு நாள் என்பதை அல்லாஹ் அறிவான்.) இருந்த அந்த கலவை சாக்கடை மண்ணைப்போல கருப்பு நிறமாக மாறி, துர்வாடை ஏற்படும் நிலைக்கு மாறிவிட்டது. (சாக்கடையில் நீண்ட நாட்கள் கிடக்கும் மண் கருப்பு நிறமாக மாறி, துர் நாற்றம் வீச ஆரம்பிக்கும் என்பதை நாம் அறிவோம்.) இது மனிதப்படைப்பின் மூன்றாவது நிலை.

(خَلَقَ الْإِنسَانَ مِن صَلْصَالٍ كَالْفَخَّارِ) (الرحمن:14)

சுட்டெடுத்த மண்பாண்டத்தைப் போல (தட்டினால்) ஓசை வரும் களிமண்ணால் அவன் (முதல்) மனிதரைப் படைத்தான். அல் குர்ஆன்: 55:1

இது மனிதப்படைப்பின் நான்காவது நிலை.

"ஸல்ஸால்" என்பது மண் கலந்து சுட்டெடுக்கப்பட்ட காய்ந்த களி மண்ணாகும். அதனை தட்டினால் "ஸல், ஸல் என ஓசை தரும் என்பதால் அதற்கு "ஸல்ஸால்" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்த "ஸல்ஸால்" என்ற வார்த்தையின் மூலம்தான் முதல் மனிதனின் படைப்பில் களிமண்ணுடன் சாதாரன மண்ணும் சேர்க்கப்பட்டுள்ளது என்ற உண்மையை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. நான் ஆரம்பித்தில் குறிப்பிட்ட தகவலை இது ஊர்ஜிதம் செய்கிறது.

(وَلَقَدْ خَلَقْنَا الْإِنسَانَ مِن سُلَالَةٍ مِّن طِينٍ) (المؤمنون:12)

நிச்சயமாக (முதல்) மனிதனை களி மண்ணின் மூலச்சத்திலிருந்து படைத்தோம். அல் குர்ஆன்: 23:12

இது மனிதப்படைப்பின் ஐந்தாவது நிலையாகும். முதல் மனிதன் களிமண்ணுடைய மூலச்சத்திலிருந்துதான் படைக்கப்பட்டிருக்க முடியும் என்று இன்று கண்டு பிடிக்கப்பட்ட அறிவியல் உண்மையை 1429 மூன்று ஆண்டுகளுக்கு முன்பே அறிவியில் அறிவு அறவே இல்லாத காலத்து மக்களுக்கு முதல் மனித படைப்பு எவ்வாறு நிகழ்ந்தது என்பதை மிக எளிமையாக இந்த குர்ஆன் எடுத்து சொல்லியிருக்கிறது. அது குர்ஆனின் அதிசயங்களில் ஒன்றாகும்.

அல்லாஹ் ஒரு பொருளைப் படைப்பதற்கு எந்த காரணங்களும் அவசியமில்லை. "குன்" என்று சொன்னால் அந்தப் பொருள் உடனடியாக உண்டாகிவிடும்.

(إِنَّمَا أَمْرُهُ إِذَا أَرَادَ شَيْئًا أَنْ يَقُولَ لَهُ كُنْ فَيَكُونُ) (يـس:82)

அவன் யாதொரு பொருளை(ப் படைக்க) நாடினால், அதற்கு அவன் கட்டளையிடுவதெல்லாம் "ஆகுக!" எனக் கூறுவதுதான் உடனே ஆகிவிடும். அல் குர்ஆன்: 36: 82

எனினும் உலகில் ஒரு நியதியை அல்லாஹ் ஏற்படுத்தியுள்ளான். வானத்தையும் பூமியையும் ஏழு நாட்களில் படைத்ததிருப்பதும் அந்த நியதிப்படிதான். (அல்லாஹ்விடத்தில் ஒரு நாள் என்பது நாம் கணக்கிடும் ஆயிரம் ஆண்டுகளுக்கு சமமானதாகும்.) எந்த பொருளையும் திடீரென படைத்து விடுவதில்லை. முதல் மனிதனை படைப்பதற்கு எந்த பொருளின் துணையும், எந்த முன்மாதிரியும் இல்லாமால் இறைவனால் படைக்க முடியும் என்றாலும் மண், களிமண், தண்ணீர் கலவையினை பல வேதியில் மாற்றங்களுக்கு உட்படுத்தி அதிலிருந்து மனிதனைப் படைப்பதற்கு தேவையான மூலப்பொருட்களை உருவாக்கி, அந்த மூலத்திலிருந்து முதல் மனிதனைப் படைத்துள்ளதும் இந்த நியதிப்படிதான்.

**இன்ஷா அல்லாஹ் தொடரும்**

# வெற்றிநடை போடும் குற்றவாளிகள்!

யார் தீவிரவாதி? ஹிந்துத்துவா என்றால் மறைக்கப் படும் பயங்கரவாதம்! என்ற பெயரில் "அவுட்லுக் இந்தியா" இதழில் திருமதி. ஸ்மிதா குப்தா ஆங்கிலத்தில் எழுதிய செய்திக் கட்டுரை! (தமிழில் சத்தியமார்க்கம்.காம்)

**இக்கட்டுரையின் சாரம்சம் - அவுட்லுக் வெளிப்படுத்தும் அதிர்ச்சித் தகவல்கள்:**

- கடந்த 2006ம் ஆண்டில் Nanded இல் நடந்த குண்டுவெடிப்புகளை நிகழ்த்தியது பஜ்ரங்தள்தான் என்பது மஹாராஷ்ட்ராவின் தீவிரவாதத் தடுப்புத்துறை (ATS) நடத்திய புலனாய்வில் வெளியானது.

- பஜ்ரங்தள்ளின் முக்கியக் குறி பள்ளிவாசல்களாக இருந்தன. கடந்த 2003 இலும் மூன்று பள்ளிவாசல்களில் குண்டுவெடிப்புகள் நிகழ்த்தப் பட்டன.

- ஆனால் அந்தக் குற்றச் சாட்டுகள் ATS & CBI இனரால் திட்டமிட்டு கைவிடப் பட்டன.

- கடந்த ஆகஸ்ட் 2008 இல் கான்பூரில் குண்டு தயாரிப்பில் ஈடுபட்டிருந்தபோது தவறுதலாக வெடித்து இரு பஜ்ரங்தள் உறுப்பினர்கள் இறந்தனர். அதைத் தொடர்ந்து இந்தியா உட்பட உலகமே அதிரும் வகையில் பல்வேறு இடங்களில் வண்டி வண்டியாக வெடிகுண்டுகள் கைப்பற்றப் பட்டன.

பெங்களூரு, அஹ்மதாபாத், டெல்லி ஆகிய பெருநகரங்களில் கடந்த மாதத்தில் நடத்தப்பட்ட தொடர்ச்சியான குண்டு வெடிப்புகளினால் உலகமே உறைந்து போயிருந்தது.

இதில் பாதிப்புக்குள்ளானவர்கள், வெடிகுண்டுகளில் இறந்து போனவர்களும் அவர்தம் உறவினர்கள் மட்டுமல்ல; இந்திய முஸ்லிம்களும் அடங்கும். இன்று வரை எந்த ஓர் இஸ்லாமிய இயக்கமோ, குழுவோ இந்த பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டதற்கான ஆதாரம் ஏதும் கிடைக்காத சூழலில் இப்பழி இந்திய முஸ்லிம்களின் மீது திட்டமிட்டுச் சுமத்தப்பட்டது.

**பாதிக்கப்பட்டது இந்திய முஸ்லிம்கள் என்றால், நன்மையடைந்தது?**

வேறு யார்? பிஜேபிதான். இல்லாத இயக்கங்கள் பெயரை உருவாக்கி பாமரன் கூட "முஸ்லிம்கள் தான் செஞ்சாங்களாம்" என்று முணுமுணுக்க வைத்தது பிஜேபியின் ஒரு வெற்றிகரமான போர் தந்திரம் என்றால் அது மிகையில்லை.

இந்திய சட்டதிட்டங்களுக்கு எதிராக குறிப்பிட்ட சமூகங்களைக் கொன்றொழிக்கவென்றே பிரத்யேகமான இராணுவ பயிற்சி முகாம்களை பகிரங்கமாக நடத்திவரும் பஜ்ரங்தள், விஷ்வ ஹிந்து பரிஷத் (V H P )இன் இளைஞர்களுக்கான பிரிவாகச் செயல்பட்டு வரும் பிரிவு என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

இத்தகைய பயங்கரவாதச் செயல்கள் அனைத்திற்கும் பின்புலமாகச் செயல்படுவது பஜ்ரங்தள் என்பது காவல்துறையினரின் புலனாய்விலிருந்து வெளிப்படும் விஷயங்கள்.

இங்கே கூறப்படும் எவையும் மிகைப்படுத்தப் பட்டவை அல்ல.

**உதாரணத்திற்கு, மஹாராஷ்ட்டிராவின் தீவிரவாதத் தடுப்புத்துறையின் புலனாய்வில் வெளியான உண்மைகள் என்ன சொல்கின்றன என்று பார்ப்போம்:**

ஓய்வு பெற்ற PWD பொறியாளரான எல்.ஜி.

ராஜ்கொண்டுவார், ஆர்.எஸ்.எஸ் உறுப்பினராவார். கடந்த ஏப்ரல் 2006 இல் மஹாராஷ்ட்ராவின் Nanded பகுதியில் உள்ள இவரது வீட்டில் சக்திவாய்ந்த குண்டுகள் வெடித்ததில் இவர் பலியானார். இவருடன் இறந்தவர் ஹெச்.பான்ஸே. காயமடைந்தவர்கள் எம்.கே.வேக், ஒய்.தேஷ்பண்டே, ஜி.ஜே.துப்தெவார் மற்றும் ஆர்.எம்.பாண்டே ஆகியோர்.

இவர்கள் அனைவரும் பஜ்ரங்தள் அமைப்பின் கட்டளையைச் செயல் படுத்திக் கொண்டிருந்தவர்கள்.

பதிவான FIR அறிக்கையில் "சேமிப்புக் கிடங்கில் வைத்திருந்த பட்டாசுகள் திடீரென வெடித்துச் சிதறியதால் அசம்பாவிதம் ஏற்பட்டது" என்று பஜ்ரங்தள் கூறியிருந்தது.

ஆனால், அடுத்தடுத்த நாட்களில் தொடர்ந்த விசாரணையில் திடுக்கிடும் பல விஷயங்கள் வெட்ட வெளிச்சமாயின. அவற்றில் ஒன்று, மஹாராஷ்ட்ராவில் சில பள்ளிவாசல்களைக் குறி வைத்து நிகழ்த்த இருந்த பெரும் குண்டு வெடிப்புகளுக்கான தயாரிப்புப் பணியில் பஜ்ரங்தள் உறுப்பினர்களான மேற்கண்ட நபர்கள் ஈடுபட்டிருந்த வேளையில், வெடிகுண்டுகளை இடம் மாற்றும்போது தவறுதலாக வெடித்திருக்கிறது.

ஆனால், அதிர்ச்சியில் உறைய வைத்த காவல்துறையின் ஜோடனையில், அனைத்து குண்டு வெடிப்புக்களையும் முஸ்லிம்கள் செய்ததாகக் காண்பிக்கும் வண்ணம் "உருவாக்கப்பட்ட தடயங்கள்" பதிவான FIR அறிக்கை அவசர அவசரமாக மாற்றி எழுதப்பட்டது.

புத்தம் புதிய F I R அறிக்கை, "இஸ்லாமியத் தீவிரவாதி"களே இதனைச் செய்ததாகக் கூறியது. தீவிரவாத அமைப்புக்கு பேரும் சூட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் 16 முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் கையில் மேற்படி நடந்த குண்டு வெடிப்புக்கான வரைபடங்கள், பொருட்கள் இருந்ததாகவும் இவர்களே இதற்கு முன் நடந்த குண்டுவெடிப்பிற்குக் காரணமானவர்கள் என்றும் ரிமாண்ட் விண்ணப்பத்தில் எழுதப்பட்டபின் செய்தியாளர்களை அழைத்து, அழுத்தம் திருத்தமாக செய்தி கொடுக்கப்பட்டது.

கடந்த மே 4, 2006இல், இந்த வழக்கு ATS இன் கைக்கு மாறியது.

அதன்பின்னர் கடந்த ஆகஸ்ட் 24 ந்தேதியில் ATSஇன் முதல் குற்றப்பத்திரிகையின்படி பஜ்ரங்தள் மற்றும் சங் பரிவாரின் பயங்கரவாதப் பின்னணி முழுமையாக வெட்ட வெளிச்சமாகியுள்ளது:

### பஜ்ரங்தள் : பின்னணி என்ன?

ராம் ஜானகி யாத்ராவின் பாதுகாப்பிற்கு ஒரு குழு என்ற பெயரில் கடந்த 1984 இல் விஷ்வ ஹிந்து பரிஷத் உருவாக்கிய அமைப்பே பஜ்ரங்தள் ஆகும்.

அதன் பின் கடந்த 1993 இல் உத்தரபிரதேச எல்லையைத் தாண்டி மிகப் பெரிய அளவில் விஸ்தீரணம் செய்யப்பட்டது. விஷ்வ ஹிந்து பரிஷத்தின் இளைஞர் பிரிவாக பஜ்ரங்தள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப் பட்டது.

வருடங்கள் உருண்டோட, ராமர் கோயிலின் கட்டுமானப் பணிகளின் பக்கம் பஜ்ரங்தள்ளின் கவனம் திரும்பியது. பிரச்னை தீர்க்க 'அவதாரம் எடுத்ததாக' அதன் தலைவர் ப்ரகாஷ் ஷர்மாவினால் வர்ணனை செய்யப்பட்டது.

"பசுக்களை கொல்பவர்களையும், ஐ.எஸ்.ஐ ஏஜண்ட் என்று நாங்கள் அடையாளம் காட்டும் முஸ்லிம்களையும் இந்திய அரசு தண்டிக்காவிட்டால், அரசின் அப்பணிகளை நாங்களே கையில் எடுத்துக் கொள்வோம்!" - உத்தரபிரதேசத்தின் வி.ஹெச்.ப்பி தலைவரான ருக்குன் சிங் பாயல் பஜ்ரங்தள் பற்றிக் கூறிய வாக்கு இது!

இந்தியாவில் உள்ள முக்கிய பள்ளிவாசல்களில் முஸ்லிம்களே வைத்துக் கொண்டதுபோல் உருவாக்கப்பட்டு உலகத்தை உலுக்கிய, பேரிழப்பை உண்டாக்கியவர்கள் பஜ்ரங்தள் குழுவினர். இவர்கள் நிகழ்த்திய சில பள்ளிவாசல் குண்டு வெடிப்புகள் பின்வருமாறு:

- பர்பானி பகுதியில் உள்ள முஹம்மதியா பள்ளிவாசல் (நவம்பர் 2003)

- ஜல்னா பகுதியில் உள்ள காதிரியா பள்ளிவாசல் (ஆகஸ்ட் 2004)

- பர்பானி மாவட்டத்தில் உள்ள பூர்ணா நகரத்தின் மெராஜுல் உலூம் பள்ளிவாசல் / மதரஸா (ஆகஸ்ட் 2004)

அவுரங்காபாத் நகரத்தில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் பெரும் குண்டு வெடிப்பினை நிகழ்த்துவதற்காக பஜ்ரங்தள் குழுவினால் தயாரிக்கப்பட்ட குண்டே தவறுதலாக வெடித்துள்ளது. இதில் பன்ஸே மற்றும் வேக் ஆகியோர் கடந்த மே மாதம் 2004 இல் அவுரங்கபாத் பள்ளிவாசலுக்குச் சென்று எடுத்துக்கொண்ட குறிப்புகளும், குண்டு வெடிப்பை நிகழ்த்துவதற்கு அவ்விருவரும் கலந்தாலோசனை செய்து பேசிய பேச்சுகள் பதிவாகிய செல் போன்களும் சிக்கியுள்ளன.

இந்து இளைஞர்களைக் கவரும் வகையில் உடற்பயிற்சி மையத்தைத் துவங்கிய பன்ஸே மற்றும் பாண்டே, முஸ்லிம் எதிர்ப்பு வெறியை இந்துக்களுக்கு ஊட்டப் பல்வேறு செமினார்கள் / வகுப்புகளை நடத்தினர். அதில் குறிப்பாக முஸ்லிம்கள் என்றாலே இந்துக்களுக்கு எதிரானவர்கள் என்றும் முஸ்லிம்களை அழித்து ஒழிக்க "ஏதாவது" செய்தே ஆக வேண்டும் என்றும் இளைஞர்களுக்கு இரத்தம் சூடேற்றும் பாடங்கள் எடுக்கப் பட்டன.

புனே, கோவா மற்றும் நாக்பூர் போஸ்லாவில் உள்ள இராணுவப் பயிற்சிக் கூடத்தில் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் தயாரிக்கும் பயிற்சியினை முறையாகக் கற்றுத் தேர்ந்தவர்கள் இவர்கள். மேற்கண்ட நகரங்களில் உள்ள RSS முகாம்களில் கராத்தே, துப்பாக்கி சுடும் பயிற்சி உள்பட பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

தவறுதலாக நடந்த குண்டு விபத்தில் பலியான ஹெச்.வீ.பன்ஸேவின் வீட்டைச் சோதனையிட்டபோது, ஒட்டு தாடி, ஒட்டு மீசை மற்றும் முஸ்லிம்கள் அணியும் உடைகள் ஆகிய பொருட்கள் கிடைத்தன.

### இந்த ஒட்டுமொத்த நாடகத்தின் நோக்கம் என்ன?

எங்குப் பார்த்தாலும் முஸ்லிம்கள் பயங்கரவாதிகள் என்ற எண்ணம் மக்கள் மனதில் ஆழமாகப் பதிய வேண்டும். அதைத் தொடர்ந்து அவர்கள் சமூகத்தில் இருந்து அப்புறப் படுத்தப் படவேண்டும். அமைதி மார்க்கம் என்ற எண்ணம் கொண்டு இஸ்லாத்தில் இணையும் மக்களின் எண்ணிக்கை, இத்தகைய நிகழ்வுகள் மூலம் பெருமளவு குறைக்கப் படல் வேண்டும். மொத்தத்தில் இஸ்லாத்தின் மீதான வெறுப்பு நாடெங்கிலும்

நிலவ வேண்டும் என்பதே இந்த சதித் திட்டத்தின் நோக்கம் என்பதை, கிடைத்துக் கொண்டு வரும் ஆதாரங்கள் தெளிவு படுத்துகின்றன.

ATS இன் புலனாய்வு அறிக்கை இவ்வாறு முடிகிறது:

பஜ்ரங்தள் மற்றும் சங் பரிவாரின் குறி மஹாராஷ்ட்ராவின் முஸ்லிம்களே!

மஹாராஷ்ட்ரா முழுவதும் நிகழ்த்தப்பட்ட குண்டுவெடிப்புச் சம்பங்களில் மேற்கூறிய இரு அமைப்பினரும் ஈடுபட்டுள்ளனர்.

"குண்டுவெடிப்புக்களை நிகழ்த்தியது முஸ்லிம்களே!" என்று உலகிற்குக் காண்பிக்கும் வகையில் முஸ்லிம்களில் ஒருபிரிவினர் இன்னொரு பிரிவினருக்கு தனிப்பட்ட விரோதம் காரணமாக குண்டு வைத்ததாக ஜோடிக்கப் பட்டது.

## இந்தியாவின் குருட்டுப் பார்வை!

குற்றமிழைத்தவர் சிறுபான்மையினர் என்றால் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கும் இந்திய மாநிலங்கள், சங்பரிவாரங்கள் சட்டத்தை மீறுகையில் சும்மா இருப்பதேன்?

அவுட்லுக் இதழின் கேள்விக்கு சிலரின் பதில்கள்:

"கர்நாடகா மற்றும் ஒரிஸ்ஸாவில் பஜ்ரங்தள் மேற்கொண்டு வரும் வெறியாட்டங்களைக் கண்டும் காணாததுபோல் இருக்கும் அரசு இயந்திரங்கள் அதிர்ச்சியளிக்கின்றன!. கிறித்துவர்கள் ஓட்டுவங்கிகளாக இல்லை என்பது அரசின் நினைப்பாக இருக்கலாம்."

-டொமினிக் இம்மானுவேல், டெல்லி கத்தோலிக் சர்ச் செய்தித் தொடர்பாளர்

"இது இந்திய முஸ்லிம்களின் அழிவுக்காலம் என்று சொல்லலாம். ஏனெனில் அநீதியான முறையில் முஸ்லிம்களுக்கு எதிரானவர் என்று காண்பிப்பதன் மூலம் தேசிய அளவில் ஒரு நபர் புகழ் பெறுகிறார்."

-ஷாஹித் சித்திக்கி, ஆசிரியர் - நயி துனியா

"மாநில அளவில் நடந்து வரும் இத்தகைய நிகழ்வுகள் அரசின் கையாலாகாத தனத்தையே காட்டுகிறது. இதில் சிறுபான்மையினரைக் குற்றம் சொல்வது தவறு."

-குர்சரன் தாஸ், பத்திரிகையாளர்

ATS துப்புத் துலங்கவும் அதன் புலனாய்வில் பல்வேறு உண்மைகளை உடைத்து வெட்ட வெளிச்சமாக்கவும் உதவிய, தான் எழுதிய Communalism Combat என்ற நூலை எழுதிய தீஸ்ட்டா செட்டால்வாட் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

"ATSஇன் இந்தப் புலனாய்வு இந்திய மண்ணில் பெரும் கிளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் மறைக்கப்பட்ட உண்மைகளை வெளிக்கொணர்ந்ததில் அதன் பங்கு மிக முக்கியமானதாகவும் உள்ளது. ஹிந்துத்துவாவின் சாயம் வெளுத்த நிமிடத்தில் இருந்து ATS மீது விழுந்த கனத்த அழுத்தம் காரணமாக அதன் அறிக்கைகளில் யூ-டர்ன் அடிக்க ஆரம்பித்தன. இதில் CBI இன் நடவடிக்கைகள் கேள்விக்குரியவையாகும். இந்த வழக்கினை வலுவிழக்கச் செய்யும் அனைத்து அயோக்கியத் தனங்களையும் CBI செய்தது"

ATI இன் புலனாய்வின் மூலம் வெளிப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளையும் அதன் பின்னணியில் இருந்து செயல்பட்ட பஜ்ரங்தள்ளும் அதைப் பின்னணியில் இருந்து கொண்டு இயக்கிய சங் பரிவார் ஆகியன CBI யின் குற்றப்பத்திரிகையில் மாற்றி எழுதப் பட்டன.

அதாவது, வெடிகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டபோது இறந்தவர்களுக்கும் எந்தவொரு பயங்கரவாதச் செயலுக்கும் தொடர்பு இல்லை என்ற தொனியில் வழக்கின் போக்கினை CBI மாற்றியமைத்தது. (The CBI chargesheet, which Setalvad procured on an RTI application, reveals that the agency simply diluted the ATS's charges of criminal conspiracy involving terrorist acts.) இதன் மூலம் மஹாராஷ்ட்டிராவில் உள்ள எந்தவொரு பயங்கரவாத அமைப்பினையும் தொடர்பு படுத்தி விசாரிக்க வழியில்லாமல், தனிப்பட்ட வழக்காக CBI மாற்றி அமைத்தது.

இதன் மூலம் பஜ்ரங்தளுக்கோ சங் பரிவாரத்தின் எந்தவொரு குழுவுக்கோ வெடிகுண்டுகள் தயாரித்து நாட்டை நிர்மூலமாக்கும் மிகப் பெரிய சதித்திட்டத்தில் எந்த விதச் சம்பந்தமும் இல்லை என்று CBI கதை கட்டியது.

கான்பூரில் கடந்த ஆகஸ்ட் 24, 2008இல் சக்தி வாய்ந்த குண்டுகளை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பஜ்ரங்தளை சேர்ந்த ராஜீவ் மிஷ்ரா மற்றும் புபிந்தர் சிங் ஆகிய இருவரும் உடல் வெடித்துச் சிதறி இறந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்த கான்பூர் மண்டல ஐ.ஜி.ப்பி. எஸ்.என்.சிங், "உத்தரபிரதேசத்தின் Special Task Force சிறப்புப் படையினர் நடத்திய புலனாய்வில் நாட்டையே சுடுகாடாக்கும் பெரும் வெடிகுண்டுகளுக்கான திட்டம் தீட்டப்பட்டிருப்பது வெளியாகியுள்ளது" எனக் கூறியிருந்தார்.

பஜ்ரங்தள் தயாரித்த வெடிகுண்டுகளில் உள்ள கிரானேடுகள் இராணுவப் படையில் பயன்படுத்தும் இரகங்களைச் சார்ந்தவை என்று வெளியான தகவல் இன்னும் சந்தேகங்களைக் கூடுதலாக்குகிறது.

இறந்துபோன பஜ்ரங்தள் புபிந்தர் சிங்கின் லாஜ்பட் நகரில் உள்ள ஸ்டுடியோவையும் அவனது வீட்டையும் காவல் துறையினர் சோதனையிட்டபோது அதிர்ந்து போயுள்ளனர்!. அங்கே சிக்கிய புபிந்தர் சிங்கின் டயரியில் முஸ்லிம்கள் பெருவாரியாக வசிக்கும் ஃபெரோஜாபாத் நகரத்தில் உள்ள பள்ளிவாசல்களில் கடுமையான உயிர்ச்சேதம் விளைவிக்கும்படியாகக் குண்டுவெடிப்புகளை நிகழ்த்துவதற்காக வைத்திருந்த குறிப்பேடுகள் சிக்கின. இதில் அனைத்து குண்டு வெடிப்புகளும் முஸ்லிம்களின் புனித மாதமான ரமளான் மாதத்தில் நடத்த திட்டமிடப் பட்டிருந்தன என்பதைக் கான்பூர் காவல்துறை தெரிவித்துள்ளது.

கான்பூர் வெடிகுண்டு சம்பவத்தில் பஜ்ரங்தள்தான் குற்றவாளிகள் என்ற ரீதியில் வலுவான ஆதாரங்களுடன் வழக்கு சென்று கொண்டிருக்கும் சூழலில், அதைப் பற்றிச் சிறிதும் அலட்டிக் கொள்ளாமல் ஒரிஸா, கர்நாடகா, கேரளா என்று மாநில வாரியாக கிறித்துவர்கள் மீது வன்முறைகளை நிகழ்த்திக் கொண்டு வருகிறது பஜ்ரங்தள்.

மனித நேயம் எனும் உணர்வை ஆழமாகக் குழி தோண்டி புதைத்து, மதத்தினைக் காரணம் காட்டி, தொடர்ந்து இனப்படுகொலைகளை மேற்கொண்டு வரும் ஹிந்துத்துவா எனும் தீய சக்தி நாட்டில் திகிலைத் தொடர்ந்து கிளப்பி வருகிறது.

இந்திய நீதித்துறையின் மீதும் காவல்துறையின் மீதும் கொஞ்சம் கொஞ்சமாக நம்பிக்கை இழந்து வரும் இந்திய மக்களுக்கு, இத்தகைய ஆதிக்க சக்திகளை அடியோடு வேரறுக்கும் கடுமையான நடவடிக்கைகள் மட்டுமே ஆறுதலாய் இருக்கும்.

நன்றி: www.satyamargam.com

# குற்றப்பரிகாரம் (கஃப்ஃபாரா) பாகம் - 2

*- மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

### 6. ளிஹார் செய்தவருக்குரிய பரிகாரம்

அறியாமை காலத்தில் தன் மனைவியை தலாக் இடுவதற்கு பயன் படுத்தும் வார்த்தைகளில் ஒன்றுதான் ளிஹார் என்பது. அதாவது ஒருவர் தன் மனைவியை பார்த்து நீ என் தாயின் முதுகைப் போல் என்று கூறினால், அந்தப் பெண் தலாக் இடப்பட்டவளாக கருதப்படுவாள். அதாவது என் தாய் எனக்கு ஹராம் என்பது போல், நீயும் என்மீது ஹராம் என்பதே அவ்வார்த்தையின் கருத்தாகும். நம்மில் யாராவது அப்படி கூறினால், அது தலாக்காக கணக்கிடப்பபடமாட்டாது, ஆனால் அவ்வாறு கூறியவர் அதற்குரிய பரிகாரத்தை செலுத்தாத வரை அந்த மனைவியிடம் உடல் உறவு கொள்வது ஹராமாகும்.

**பின்வரும் பரிகாரங்களை முறைப்படி நிறைவேற்ற வேண்டும்;**

1. அடிமையை உரிமை இடுதல், அதற்கு முடியாதவர்
2. இரண்டு மாதங்கள் தொடர்ந்து நோன்பு நோற்க வேண்டும், அதற்கும் முடியாதவர்
3. அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும்.

**அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:**

மேலும் எவர் தம் மனைவியரைத் தாய்களெனக் கூறிய பின் (வருந்தித்) தாம் கூறியதை விட்டும் திரும்பி (மீண்டும் தாம்பத்திய வாழ்வை நாடி)னால், அவ்விருவரும் ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன்னர் ஓர் அடிமையை விடுவிக்க வேண்டும். அதனைக் கொண்டே நீங்கள் உபதேசிக்கப்படுகிறீர்கள் - மேலும், அல்லாஹ், நீங்கள் செய்பவற்றை நன்கறிபவனாக இருக்கின்றான்.

ஆனால் (அடிமையை விடுதலை செய்ய வசதி) எவர் பெறவில்லையோ, அவர், அவ்விருவரும் ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன் இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்க வேண்டும்; எவர் இதற்கும் சக்தி பெறவில்லையோ, அவர் அறுபது ஏழைகளுக்கு உணவு அளித்தல் - வேண்டும்; நீங்கள் அல்லாஹ்வின் மீதும் அவனுடைய தூதர் மீதும் விசுவாசம் கொள்வதற்காக (இவ்வாறு கட்டளையிடப்பட்டுள்ளது). மேலும் இவை அல்லாஹ் விதிக்கும் வரம்புகளாகும்; அன்றியும், காஃபிர்களுக்கு நோவினை செய்யும் வேதனை உண்டு. 58:3,4

## 2. சிறுபாவங்களுக்கான குற்றப்பரிகாரங்கள்

### 1. ஐவேளைத் தொழுகை

பெரும் பாவத்தை தவிர்ந்து கொண்ட எந்த ஒரு முஸ்லிமாவது பர்ளான தொழுகைக்காக நல்ல முறையில் ஒழு செய்து அத்தொழுகையை நல்ல முறையில் தொழுதால் அதற்கு முந்திய பாவங்களுக்கு அது பரிகாரமாகும், இது காலம் முழுவதுமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (சுனனுல் பைஹகி)

### 2. ஜுஃம்ஆத் தொழுகை

யார் வெள்ளிக் கிழமை குளித்து, பல் துலக்கி, அவரிடத்திலுள்ள மணத்திரவியத்தை பூசி, அவருடைய ஆடையில் நல்லதை அணிந்து, பள்ளிக்கு வந்து மனிதர்களின் பிடரியை மடக்கிகொண்டு செல்லாமல் அவருக்கு முடிந்த அளவு (சுன்னத்து) தொழுது, இமாம் (குத்பா பிரசங்கத்திற்காக) வெளியானதிலிருந்து(ஜுஃம்ஆ) தொழுகையை தொழும் வரை வாய்மூடி (யாரிடமும் பேசாமல்) இருந்தால் இந்த ஜுஃம்ஆவிற்கும் அதற்கு முந்திய ஜுஃம்ஆவிற்கும் மத்தியிலுள்ள பாவங்களுக்கு பரிகாரமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (சுனனுல் பைஹகி)

பெரும் பாவங்களிலிருந்து தவிர்ந்து கொண்டால், ஐவேளைத் தொழுகைகள் மற்றும் ஒரு ஜுஃம்ஆவிலிருந்து இன்னுமொரு ஜுஃம்ஆ (அவைகளுக்கு மத்தியில் நிகழும் சிறு தவறுகளுக்கு) பரிகாரமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

### 3. உம்ரா செய்தல்

ஒரு உம்ரா இன்னும் ஒரு உம்ராவுக்கு மத்தியிலுள்ள (சிறு பாவங்களுக்கு) பரிகாரமாகும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹஜ்ஜிற்குரிய கூலி சுவர்க்கத்தை தவிர வேறில்லை என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

### 4. அரஃபா நோன்பு இரு வருட பாவங்களுக்கு பரிகாரமாகும்

அரஃபா நாளின் நோன்பை நோற்பது முன் சென்ற பின்வரும் இரு வருடங்களின் பாவங்களுக்கு பரிகாரமாகும், ஆஷுரா நாளின் நோன்பை நோற்பது ஒரு வருட பாவத்திற்கு பரிகாரமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (சுனனுல்பைஹகி)

### 5. ஆஷுரா நோன்பு ஒரு வருட பாவங்களுக்கு பரிகாரமாகும்

அரஃபா நாளின் நோன்பை நோற்பது முன் சென்ற பின்வரும் இரு வருடங்களின் பாவங்களுக்க பரிகாரமாகும், ஆஷுரா நாளின் நோன்பை நோற்பது ஒரு வருட பாவத்திற்கு பரிகாரமாகும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (சுனனுல்பைஹகி)

### 6. சபையில் ஏற்பட்ட தவறுகளுக்கு பரிகாரம்

நபி(ஸல்) அவர்கள், அவர்களின் கடைசி காலத்தில் ஒரு சபையிலிருந்து எழுந்தால்,

سُبْحَانَكَ اللهم وَبِحَمْدِكَ أَشْهَدُ أَنْ لَا إِلَهَ إلا أنت أَسْتَغْفِرُكَ وَأَتُوبُ إِلَيْكَ

(சுப்ஹானகல்லாஹுஃம்ம வபிஹம்திக அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லா அன்த அஸ்தக்பிருக வஅதூபு இலைக) என்று ஓதுவார்கள். அப்போது, அல்லாஹ்வின் தூதரே! இதற்கு முன்பு கூறாத வார்த்தையை இப்போது கூறுகின்றீர்களே என (நபித்தோழர்கள்) கேட்டார்கள். இது சபையில் நடந்த (தவறுகளுக்கு) பரிகாரம் என்றார்கள். (சுனனுத்தாரமி)

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 5:2

## போட்டிக்குரிய கேள்விகள்

1. அல்லாஹ்வின் கட்டளைப்படி அறுத்துப் பலியிட அழைத்துச் செல்லப்பட்ட நபி யார்?
   a. இஸ்ஹாக்(அலை) b. இஸ்மாயீல்(அலை)
   c. இத்ரிஸ்(அலை)
2. ஹஜ் மற்றும் உம்ராவிற்காக இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து வரக்கூடியவர்களுக்கு நிய்யத் வைக்கும் எல்லை எது?
   a. மக்கா b. ஜித்தா
   c. யலம்லம்
3. நபி(ஸல்) அவர்கள் எந்த உலோகத்தில் செய்த மோதிரம் அணிந்திருந்தார்கள்
   a. பவளம் b. தங்கம்
   c. வெள்ளி
4. ஹஜ் செய்யக்கூடியவர்கள் பிறை 8ஆம் நாள் லுஹர் தொழுகையை எந்த இடத்தில் நிறைவேற்ற வேண்டும்
   a. ஹரம் b. மினா
   c. முஸ்தலிபா
5. எந்தெந்த தொழுகைகளை அரபா தினத்தன்று ஒன்றாக சேர்த்து தொழும்படி கட்டளையிடப் பட்டுள்ளோம்
   a. அஸர் மற்றும் மஃரிப் b. லுஹர் மற்றும் அஸர்
   c. பஜர் மற்றும் லுஹர்

## விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.
2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக Abdullah,AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.
3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாக அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.
4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.
5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

# கோபம் தவிர்ப்போம்!

எனக்குப் போதனை செய்யுங்கள் என்று ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் கேட்டபோது "கோபம் கொள்ளாதே" என்றனர், பலமுறை அவர் கேட்டபோதும் "கோபம் கொள்ளாதே" என்பதையே கூறினார்கள். அபூஹுரைரா(ரலி) : புகாரி

சிறந்த வீரன் தாக்கும் திறன் அடிப்படையில் எடைப்போடுவதில்லை. சிறந்த வீரன் என்பவன் கோபத்தின் போது தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்பவனே! என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அபூஹுரைரா(ரலி) : புகாரி, முஸ்லிம்

ஒருவர் நின்று கொண்டிருக்கும் போது கோபம் வந்தால் உட்கார்ந்து விடவும், கோபம் போய்விட்டால் சரி, இல்லையெனில் படுத்துவிடவும் என்று நபி(ஸல்) கூறினார்கள். அபூதர்(ரலி) : அஹ்மத், திர்மிதீ

அல்லாஹ்வின் திருப்தியை நாடி கோபத்தை மென்று விழுங்குவதை விட சிறந்ததாக வேறு எதனையும் ஒருவர் விழுங்க முடியாது என்று நபி(ஸல்) கூறினார்கள். இப்னு உமர்(ரலி) : அஹ்மத்

கடின சித்தமும் முரட்டுத்தனமும் கொண்டவர் சுவர்க்கத்தில் பிரவேசிக்க முடியாது என்பது நபிமொழி. ஹாரிஸா இப்னு வஹ்ப்(ரலி) : அபூதாவூத்

மக்களுடன் கலந்து வாழ்ந்து அவர்களிடமிருந்து ஏற்படும் துன்பங்களை சகித்துக் கொள்பவர், மக்களுடன் கலந்து வாழாத- அவர்களின் துன்பங்களை சகித்துக் கொள்ளாத வரைவிட சிறந்தவர் என்பது நபிமொழி. இப்னு உமர்(ரலி) : திர்மித், இப்னுமாஜா

**அறிவுப் போட்டி - 5:1 க்கான பரிசு பெறுபவர் : ஏ.எஃப். அமனி அஃப்ரா (0557383643)**

## அறிவுப் போட்டி - 5:1 க்கான விடைகள்

1. a. ஹிஜ்ரி 2ம் ஆண்டு
2. a. இறையச்சம்
3. b. ரமளான்
4. c. நேர்வழி பெற
5. a. ஷவ்வால் நோன்பு

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

**அல்ஹம்துலில்லாஹ்**

"சுவனப்பாதை" மாத இதழ் இணையத்தில்!!!

**www.suvanam.com**

"சுவனப்பாதை" முந்தைய பதிப்புகள் PDF கோப்புகளாக பதிவிறக்கம் செய்து படித்துப் பயன்பெறுங்கள்.